# பன்னூல் பரப்பும் பைந்தமிழ்ச் செல்வர்

**2009**



த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களின் படைப்புப் பணி மற்றும் புத்தகத் திருவிழாவினைத் தொடர்ந்து விரிவாக நடத்துவதன் மூலம் சிறந்த நூல்களை வாசிக்க தமிழக மக்களுக்கு வழிவகை செய்து கொடுக்கும் சேவை ஆகியவற்றைப் பாராட்டி திருவாடுதுறை ஆதீனத்தின் சார்பில் ‘ பன்னூல்பரப்பும் பைந்தமிழ்ச் செல்வர் ’ என்ற விருது வழங்கப்பட்டது.

03.09.2009 ஆம் தேதி திருவாடுதுறை ஆதீனசபையில் இருபத்தி மூன்றாவது குருமகா சன்னிதானம் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய

சுவாமிகள் அவர்களால் ஆதீன மரபுப்படி பொன்னாடை போர்த்தி, உருத்திராக்க மாலை அணிவித்து இவ்விருது வழங்கப்பட்டது.


உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக் கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை - நாகை மாவட்டம்
- தோற்றம் 14 ஆம் நூற்றாண்டு -

ஆதீன ஆன்மார்த்த மூர்த்தி அருள்மிகு ஞான மாநடராசப் பெருமான்
ஆவணி வளர்பிறைச் சதுர்த்தசி திருநீராட்டு விழாச் சிறப்பு விருது

சைவ சித்தாந்தச் செந்நெறியும், திருமுறைச் செல்வமும், செந்தமிழ் மொழியும்,
அரன் திருக்கோயில்கள், அறநிலையங்கள், அருங்கலை பலவும் புரந்தருளிவரும்
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்து மூன்றாவது குரு மகா சன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வியின்போதே தேசியப் பற்றும், தமிழ்ப் பற்றும் கொண்டவராய்ப் பல அமைப்புகளில் தலைமைப் பொறுப்பேற்றுச் சிறந்த சேவைகளால் முதன்மையராகத் தேர்வு செய்யப்பெற்ற பெருமையுடையாரும், பொதுநலம் கருதி புதிய சிந்தனையில் சிராப் பருவத்தில் மாணவர் முன்னேற்றச் சங்கம் அமைத்துப் படிப்படியாக பாரதி இளைஞர் மன்றம், பகத்சிங் இளைஞர் மன்றம், இளைஞர் எழுச்சி இயக்கம் என அமைப்பின் வழி மனித நேயத்தோடு தொண்டுகளைப் பெருக்கி அனைத்தையும் ஒருமுகமாக்கி மக்கள் சிந்தனைப் பேரவை என்ற பொது அமைப்பினை நிறுவிப் பத்தாண்டுகளாக மகத்தான பணிமேற்கொள்ளும் பண்பினரும், கலை, இலக்கியம், விஞ்ஞானம், சமூகசேவை மற்றும் சமூகவியல் இலட்சியங்களைக் குறிக்கோளாக்கி எழுச்சிமிகு எண்ணங்களை எழுத்தாலும், உரைப்பான பேச்சாலும் எடுத்து இயம்பும் சிறந்த சிந்தனையாளரும், ஆண்டொன்றுக்கு பைந்தமிழ்ப் பாவலர் மகாகவி பாரதிக்கு விழா எடுத்து அதில் நல்லறிஞர் ஒருவருக்கு விருதும் வழங்கிப் பெருமை சேர்க்கும் கவி ஆர்வலரும், விடுதலைப் போரின் முன்னம் நிகழ்வுகளை பெரும் பேச்சால் இன்று நம் முன்னர் நினைவில் கொணர்ந்து உலக மக்களிடத்து தேசப் பற்று பெருகி வளம் சேர்க்க வழி வகுக்கும் செஞ்சொல் நாவலரும், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கரிடத்து நற்பண்புகளை வளர்க்கும் நற்சிந்தனை அரும்புகளை மலராக்கி மணம் பெறச் செய்யும் மாணவத் தோழரும், விடுதலை வேள்வியில் தமிழகம், வரலாற்றுப் பாதையில், தேசிய விடுதலையும் தியாகச் சுடர்களும் என பல வரலாற்று நூல்கள் ஆக்கி நம் நாட்டவரிடத்து நாட்டுணர்வை ஊட்டி வளர்க்கும் நற் பெரும் நூலாசிரியரும், நாடு, நகரம், இல்லம் என அனைத்து நிலைகளிலும், நூலகம் என்னும் முழக்கத்தை முன் வைப்பதோடு பெருமுயற்சியால் அதனைப் பெரும்பான்மை நகரங்களிலும் அமைத்து நூல் அறிவைப் பெருக்க முயன்ற மொய்ம்பினரும், மகத்தான பணிகளின் மகுடமாக ஐந்தாண்டுகளாகக் கொங்கு நாட்டு மக்களை ஒன்று சேர்த்து ஒருசேரக் காணும் புரட்சிகரமான புத்தகக் திருவிழாவை ஈரோட்டில் நடத்தி வாகை சூடியும், வாழ்த்துப் பெற்றும் மகிழ்ந்ததோடு அல்லாமல் பயன்பாட்டுடன் மற்றாரையும் மகிழ்வித்த மாண்பினருமான

சாதனைச் செம்மல், சேவைச் செம்மல், பாரதி இலக்கியச் செல்வர்,
தலைசிறந்த குடிமகன்
ஈரோடு. திருமிகு. த. ஸ்டாலின் குணசேகரன் பி.எஸ்சி., பி.எல்.,

அவர்களின் தமிழ் நூல் பணிகளைப் பாராட்டி, அன்னாருக்கு
அருள்மிகு ஞான மாநடராசப் பெருமான் அருட்கவசமாகப்
பொன்னாடை போர்த்தி, உருத்திராக்க மாலை அணிவித்து
" பன்னூல் பரப்பும் பைந்தமிழ்ச் செல்வர் "
என்னும் சிறப்பு விருது வழங்கி வாழ்த்தியருளுகின்றார்கள்.

திருவள்ளுவர் ஆண்டு 2040
மெய்கண்டார் ஆண்டு 786

விரோதி ஆண்டு ஆவணி 18
03-09-2009 வியாழக் கிழமை